# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 12.03.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த குத்பாவில் இறைவனின் **ஹஸீப்** என்ற பண்பின் அடிப்படையில் முஃமின்களின் நிலைமைகளைப் பற்றி கூறப்பட்டது. அதாவது அவர்கள் தமது உறுதியான ஈமானின் காரணத்தால் எல்லா சோதனைகளிலும், எதிரிகளிடமிருந்து கிடைக்கக் கூடிய அனைத்து துன்பங்களிலும் **ஹஸ்புனல்லாஹ்** – அல்லாஹ் எங்களுக்கு போதுமானவன் என்று முழங்குகின்றார்கள். மேலும் உலக மக்களிடமிருந்து வரக்கூடிய அனைத்து கஷ்டங்கள், இன்னல்கள் ஆகியவை அவர்களின் ஈமானை பலவீனப்படுத்தாது.

இரண்டாவது விஷயமாக நபிமார்களுக்கும், முஃமின்களுக்கும் துன்பங்களை கொடுக்கக் கூடிய எதிரிகளுக்கு அல்லாஹ் கணக்கு கேட்பதற்கு போதுமானவனாக இருக்கின்றான் என்று கூறினேன். **ஸரீஉல் ஹிஸாப்** என்பதன் கருத்து, எதிரிகள் மற்றும் வரம்பு மீறுபவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவனே முடிவெடுத்துக் கொள்கிறான். அவன் அனைத்து தற்பெருமை கொள்பவர்களையும் இவ்வுலகத்தில் அல்லது மறுமையில் பிடிப்பான். மேலும் கணக்குக் கேட்பான். பொதுவாக அநீதியிழைக்கும் மனிதன் இவ்வுலகத்தில் இறைவனின் பிடியிலிருந்து விலகியிருப்பதால், நான் செய்வது சரிதான் என்று அவன் நினைக்கின்றான். இவ்விஷயமானது அவனை மேலும் அநீதியிழைப்பதில் அதிகப்படுத்துகிறது. வெளிப்படையாக அவன் வாயால் இறைவன் பெயரை உச்சரிக்கின்றான். ஆனால் இறைவனோ அவனது உள்ளத்தில் என்ன இருக்கிறது என்பதை அறிகின்றான். எனவே, இவ்வாறான மனிதர்கள் சம்பந்தமாக இறைவனின் முடிவு வெளிப்படும் போது மிக பயங்கரமான முடிவாக அது இருக்கும்.

இதனைப் பற்றி விரிவாக ஓர் ஹதீஸில் மிகக் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்:

கியாமத் நாளில் எவரது கணக்கு அதிகமாக எடுக்கப்பட்டதோ அவருக்கு தண்டனை தான் வழங்கப்படும். தொடர்ந்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், **ஃபஸவ்ஃப யுஹாஸபு ஹிஸாபய்யஸீரா** – விரைவில் எளிதான கேள்வி கேட்கப்படும் என்று அல்லாஹ் கூறவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், திருக்குர்ஆனில் கூறப்பட்ட அந்த கணக்கெடுப்புக்கு ஆஜர்படுத்தப்படுவது என்றுதான் பொருள். எவரிடம் நுணுக்கமாக கணக்கெடுக்கப்படுகிறதோ அவருக்குத்தான் தண்டனை கொடுக்கப்படும். ஆக, இது மிக பயங்கரமானதாக இருக்கின்றது. இறைவன் அனைவரின் மீதும் கருணை காட்டுவானாக! **தக்வாவின் வழியில் செல்வதே ஒரு முஃமினின் தனித்தன்மையாக இருக்கின்றது.** தக்வாவின் வழியில் செல்பவர்களுக்கு இறைவனிடமிருந்து நிஃமத்துகள் கிடைக்கின்றன. எவரது உள்ளத்தில் இறையச்சம் இருக்கின்றதோ அவர்தான் உண்மையில் தக்வாவில் இருக்கின்றார். தனது செயல்களை கண்காணித்து வருவதில் முயற்சி செய்வார். இறைவனுக்கு செய்ய வேண்டிய கடமைகள், படைப்பினங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் ஆகியவற்றை சரியான முறையில் செயல்படுத்துவார்கள். இவ்வாறு செயல்படுபவர்களுக்குதான் இறைவன் **ஹஸீப்** – போதுமானவன் என்ற பண்பினை வெளிப்படுத்துகின்றான்.

இதனை எவ்வாறு வெளிப்படுத்துகின்றான் என்பதை இறைவன் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:

**வ யர்ஸுக்ஹு மின் ஹய்ஸு லா யஹ்தஸிப். வமய்ய[த்]தவக்கல் அலல்லாஹி ஃபஹுவ ஹஸ்புஹ். இன்னல்லாஹ பாலி(g)கு அம்ரிஹ். (q)க(d)த் ஜஅலல்லாஹு லிகுல்லி –ய் யின் (q)க(d)த்ரா** – அவர் எதிர்பாராத இடத்திலிருந்து அவன் அவருக்கு உணவு அளிப்பான். அல்லாஹ்விடம் நம்பிக்கை வைப்பவருக்கு அவனே போதுமானவன். நிச்சயமாக அல்லாஹ் தனது நோக்கத்தை நிறைவேற்றுவான். அல்லாஹ் ஒவ்வொன்றிற்கும் ஓர் அளவை நியமித்துள்ளான். **(65:4)**

இதற்கு முந்தைய வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: **வமய்யத்த (q)கில்லாஹ யஜ்அல்லஹு ம(kh)ஹ்ரஜா** - அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவருக்கு அவன் ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்துவான்.(65:3)

ஆக, இறையச்சம் உடையவர்களுக்கு இறைவன் ரிஸ்கினை வழங்குகின்றான். மேலும் இறைவன், அவர் நினைத்துப் பார்க்காத வழியினையும் திறக்கின்றான். ஓர் இறையச்சம் உடையவர் ரிஸ்க்கிற்காக இறைவன் மீது மட்டும் நம்பிக்கை வைக்கின்றார் என்றால், அது உண்மையான நம்பிக்கையாக இருக்கும் பட்சத்தில் இறைவன் அவருக்கு தனது ஹஸீப் (போதுமானவன்) என்ற தோற்றத்தை வெளிப்படுத்துகின்றான். இங்கு இந்த வி-யத்தை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ரிஸ்க் என்ற சொல் ஓர் குறுகிய வட்டத்திற்குள் பொருள்தரும் சொல் அல்ல. மாறாக, இதற்கு மிகப் பரந்த பொருள் உள்ளது. அகராதியில் இதற்கு பொருளாக அனைத்து வகையான ரிஸ்க்கையும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது பௌதீக வாழ்விற்காக தேவைப்படக்கூடிய உணவு, பொருள் போன்றவைகளும் அடங்கும். இதற்கு ஆன்மீக ரிஸ்க் என்ற பொருளும் உண்டு. அது மட்டுமல்லாமல், மனிதனுக்கு தேவைப்படக்கூடிய அனைத்து ஆற்றல்களும் இதில் அடங்குகின்றது. ஓர் இறையச்சம் உடையவருக்கு பௌதீக ரிஸ்க் மட்டும் தேவைப்படாது. மாறாக, அனைத்து வகையான ரிஸ்கினையும் அல்லாஹ்விடமிருந்து எதிர்பார்க்கின்றார். ரிஸ்க் என்ற சொல்லின் மிகப்பரந்த பொருளுக்கு ஏற்றவாறு இதனைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நமக்கு உன்னதமான முறையில் விளக்கிக் கூறியுள்ளார்கள். அன்னார் இதனைப் பற்றி உதாரணங்கள் கூறும் போது, மிக உயர்ந்த நடைமுறையினைக் கொண்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பற்றியதான உதாரணங்களைக் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தக்வாவின் அருள்களில் இதுவும் இருக்கின்றது. அதாவது அல்லாஹ் முத்தகீன்களுக்கு மார்க்க சம்பந்தமான துன்பங்களிலிருந்து இரட்சிப்பினை வழங்குகின்றான். இவ்வாறே அல்லாஹ் முத்தகீன்களுக்கு தனிப்பட்ட முறையில் ரிஸ்கினையும் வழங்குகின்றான். இங்கு நான் ஞானத்தின் ரிஸ்கினைப் பற்றி கூறுவேன். அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உம்மியாக இருந்தும் கூட அனைத்து உலகத்தினரையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதில் வேதத்திற்குரியவர், தத்துவஞானிகள், மிக உயர்ந்த அறிவினைப் பெற்ற அறிஞர்கள் மற்றும் ஆலிம், ஃபாஸில் போன்றோர்களும் அடங்குவர். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு ரிஸ்க் கிடைத்ததென்றால் அன்னார் (அதன் மூலம்) அனைவர் மீதும் வெற்றி கொண்டார்கள். மேலும் அவர்களின் தவறுகளை வெளிப்படுத்தினார்கள். இவ்வாறான ரிஸ்கிற்கு உதாரணமே கிடையாது. ஆன்மீக ரிஸ்கிற்காக திகழ்கின்ற திருக்குர்ஆன் என்ற ஆன்மீக உணவுத்தட்டு கூட அன்னார் மீதே இறங்கியது. இதற்கான உதாரணம் கூட வேறு எங்கும் கிடைக்காது. இதனைப் போன்ற வேறொரு வசனத்தை வேறு எவராலும் கொண்டுவர இயலாது என்பது திருக்குர்ஆனின் சவாலாக இருக்கின்றது. அது சிறிய சூராவாக இருந்தாலும் சரியே. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இறங்கிய இது எவ்வாறான ஆன்மீக ரிஸ்க் என்றால், இது எவ்வாறான அறிவுப்பூர்வமான ஆன்மீகத்துவம் கொண்ட வார்த்தைகள் என்றால்,இது தனது அடையாளங்களின் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் மட்டும் உலகத்தின் வாயை அடைக்கவில்லை. மாறாக கியாமத் வரை படிப்பவர்களுக்கு, சிந்திப்பவர்களுக்கு அனைத்து வகையான புதிய புதிய அடையாளங்களை வெளிப்படுத்திக் கொண்டே செல்கின்றது. நிபந்தனை என்னவென்றால் சிந்திக்கும் கண்கள் வேண்டும். எத்தகைய அறிவு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதோ அதில் சிலவற்றை திருக்குர்ஆன் கூறியுள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அறிவுக் கருவூலங்களை அல்லாஹ் வழங்கியிருந்தான். அதனை சஹாபாக்களால் கூட யூகிக்க முடியவில்லை. உதாரணமாக அணு குண்டினைப் பற்றி கூறியுள்ளார்கள். அதனை பெரிய பெரிய சஹாபாக்களால் கூட புரிய முடியாமல் இருந்தது. ஆனால் அல்லாஹ், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அதன் பயங்கரமான விளைவுகளைப் பற்றிய அறிவினை அல்லாஹ் வழங்கியிருந்தான். அதற்கு திருக்குர்ஆன் **ஹு(த்)தமா** என்று பெயர் வைத்துள்ளது.

அல்லாஹ் திருக்குர்ஆனில், **வமா அத்ராக மல் ஹு(த்)தமா** என்று கூறுகின்றான். **ஹு(த்)தமா** என்றால் என்னவென்று தெரியுமா? இது சஹாபாக்களை நோக்கி கூறப்பட்டுள்ளது. இது உள்ளம் வரை சென்றடையும். அதாவது முதலில் உள்ளத்தில் நுழையும். பிறகு உடம்பில் விளைவினை ஏற்படுத்தும். ஜப்பானில் அணுகுண்டு விழுந்த இடத்தில் ஒரு மியூசியம் வைக்கப்பட்டுள்ளது. அதில் மக்களின் நிலைகளின் புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. அணுகுண்டு விழுந்த இடத்தில் நின்றிருந்தவர்கள் அந்த இடத்திலேயே இறந்து விட்டார்கள். அவர்களது இதயம் செயலிழந்து விட்டது. பிறகு இதயம் செயலிழந்ததும் கூட உடலின் தோல் தொங்க ஆரம்பித்து விட்டது. இவ்வாறு உட்கார்ந்தவாறும், படுத்தவாறும், நின்றவாறும் அந்த நிலையிலேயே இறந்துபோய் விட்டனர். எவ்வாறிருந்தபோதிலும் இது ஓர் உதாரணமாகும். இவ்வாறாக இறைவன் கூறிய பல உதாரணங்கள் அறிவியல் மூலமாக தற்போது வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது திருக்குர்ஆனின் அந்தஸ்த்தை நிரூபிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அந்தஸ்து மற்றும் அன்னாரின் அறிவு, ஆன்மீகத்திறன் ஆகியவற்றை இது நிரூபித்துக் காட்டுகின்றது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள், ஆன்மீகத்திலிருந்து வலிமைக்கிணங்க அறிவு மற்றும் ஞானத்தின் கருவூலங்களை பெற்றார்கள். அவர்களின் சிந்தனைகள் கூட மார்க்கப் பற்று, ஆன்மீகத்தின் ரிஸ்கை தேடக் கூடியவையாக இருந்தது. சஹாபாக்கள் பௌதீக ரிஸ்கினை இறைவனின் பொறுப்பில் விட்டுவிடுபவர்களாகத் திகழ்ந்தார்கள். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாயிலிருந்து எப்பொழுது ஞானப் பொன்மொழிகள் வெளிப்படும் என்பதை எதிர்பார்த்தவாறு இருந்தார்கள். அந்த ரிஸ்கின் மூலம் தங்களை நிரப்பிக் கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். இதில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஓர் முன்னுதாரணமாக திகழ்ந்தார்கள். எந்நேரமும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வீட்டின் வாசலில் அமர்ந்திருந்தார்கள். வேறு கவலையும் இருந்ததில்லை. பசியினாலும் பட்டினியாலும் மிக மோசமான நிலைகள் உருவாயின. இதற்கான விளைவுகளை இப்பொழுது பாருங்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களின் ரிவாயத் இன்றுவரை நிலைத்து நிற்கிறது. அது மட்டுமல்லாமல் கியாமத் வரை நிலைத்திருக்கும். ஆக இவ்வாறனவர்கள் எந்தப் பலனை, எந்த ரிஸ்கினை அடைந்தார்களோ அதனை மற்றவர்கள் வரை சென்றடையச் செய்தார்கள். சஹாபாக்களின் அதிகப்படியானவர்கள் வியாபாரத்தில் கவனமுள்ளவர்களாக இருந்தாலும் அவர்களின் நிலை எவ்வாறு இருந்தது என்றால் தக்வாவின் வழியில் சென்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தரும் ரிஸ்கிலிருந்து பலன் பெறுபவர்களாக இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அவ்வப்போது இறங்கிய ஆன்மீகத்தட்டிலிருந்து பலன் பெறக்கூடியவர்களாக திகழ்ந்தார்கள். இதில் சிலர் குறைவாகத்தான் வேலை செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். ஆனால் இறைவன் அவர்களது ஒவ்வொரு வேலைக்கும் பன்மடங்கு பரக்கத்தினை வழங்கினான்.

ஒரு சஹாபி கூறுகின்றார்: அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ரிஸ்கில் பரக்கத் உண்டாவதற்காக துஆ செய்யுமாறு வேண்டினேன். இதன் பிறகு, எனது வேலைகளில் எந்த அளவுக்கு பரக்கத் உண்டானது என்றால் நான் மண்ணில் கை வைத்தால் கூட அது தங்கமாக மாறியது என்று அந்த சஹாபி கூறினார். ஆக அவர்கள் தக்வாவின் பக்கம் அடியெடுத்து வைத்ததாலும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுத்ததாலும் உலகம் அவர்களின் அடிமையாக மாறி விட்டது. பல சஹாபாக்கள் உலக வியாபாரத்தினையும் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் உலகப் புழுக்களாக இருந்ததில்லை. ஆனால் இவ்வாறான சஹாபாக்களின் மரணத்திற்குப் பிறகு கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை விட்டுச் சென்றார்கள். ஆக, இவ்வாறானவர்கள் ஆன்மீக ரிஸ்குடன் உலக ரிஸ்கினையும் பெறக்கூடியவர்களாக இருந்தார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவர் இறையச்சம் உடையவராக இருக்கின்றாரோ, இறைவனது பார்வையில் முத்தகீயாக இருக்கின்றாரோ அவரை அனைத்து வகையான இன்னல்களிலிருந்தும் விலக்குகிறான். மேலும் அவர் நினைத்துப் பார்க்காத இடத்திலிருந்து, எதற்காக இது கிடைக்கிறது என்பது தெரியாத அளவிற்கு ரிஸ்கினை

வழங்குகிறான். இது இறைவனின் நிலையான வாக்குறுதி ஆகும். நமக்கும் இறைவன் தனது வாக்குறுதியினை மீறமாட்டான் என்பதில் நம்பிக்கை உள்ளது. மேலும் அவன் மிகப்பெரிய ரஹீமாகவும், கரீமாகவும் இருக்கின்றான். எவரொருவர் இறைவனைச் சார்ந்து இருக்கின்றாரோ அவருக்கு அனைத்து அவமரியாதையிலிருந்து இரட்சிப்பையும் வழங்குகின்றான். அது மட்டுமல்லாமல் அவனுக்கு பாதுகாவலனாகவும், உதவியாளனாகவும் ஆகி விடுகின்றான். அல்லாஹ் எப்போதும் தனது வாக்குறுதியை மீறுவதில்லை. நாம் அவ்வாறு வாதம் செய்பவரைத் தான் பொய்யர் என்று சொல்வோம். ஒன்று அவருடைய தக்வா மற்றும் சீர்திருத்தம் இறைவனிடத்தில் ஏற்கத்தக்கதாக இருப்பதில்லை. அல்லது அவர் இறைவனின் முத்தகீயாக இருப்பதில்லை. மக்களின் முத்தகீயாகவும், தனது செயலை மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யக் கூடியவராகவும் இருப்பார். ஆக அவர்களின் மீது ரஹ்மத் மற்றும் பரக்கத் இறங்காமல் சாபம் இறங்குகின்றது. அதனால் அவர்கள் துன்பத்தில் அகப்பட்டவர்களாக இருப்பார்கள். இறைவன் இறையச்சம் உடையோரை உலகில் பல்வேறு நபிமார்கள், வலிமார்கள் இறை நேசர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால், வீணாக்கமாட்டான். அவன் தனது வாக்கில் உண்மையாளனும், முழுமையானவனுமாக இருக்கின்றான்.

மேலும் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் தாவூது (அலை) அவர்கள் ஸபூர் என்ற வேதத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள். நான் சிறுவனாக இருந்தபின் இளைஞரானேன். பின்னர் முதிய வயதை அடைந்தேன். நான் இதுவரைக்கும் எந்த முத்தகீயையாவது மற்றவர்களிடம் கையேந்துபவர்களாக கண்டதில்லை. அவர்களின் சந்ததிகளும் வீடு வீடாகச் சென்று கையேந்தியதைக் கண்டதில்லை.

ஆம் இது உண்மைதான். இறைவன் தனது அடியானை வீணாக்குவதில்லை. மற்றவர்களிடம் கையேந்துவதிலிருந்து பாதுகாக்கவும் செய்கின்றான். 1. உலகில் பல்வேறு நபிமார்கள், வலிமார்கள், இறை நேசர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால், இவர்களை யாராவது ஒருவர் இவர்கள் கையேந்தி பிச்சை கேட்டார்கள் என்று கூற முடியுமா? அல்லது அவர்களின் சந்ததிகளைத்தான் வீடு வீடாக சென்று உணவு கேட்டு வந்தார்கள் என்று கூற முடியுமா? நிச்சயமாக இல்லை. எனது கொள்கை என்னவென்றால் ஒரு மனிதர் உண்மையாளராகவும் முத்தகீயாகவும் இருந்தால் அவருடைய ஏழு தலைமுறையினருக்கு இறைவன் ரஹ்மத் மற்றும் பரக்கத்தினை வழங்குகின்றான்.

ஆக இறைவனைச் சார்ந்திருப்பவர்களுக்கு, தக்வாவை மேற்கொள்வது முதல் நிபந்தனையாக இருக்கின்றது. மேலும் தக்வாவில் முன்னேறும் பழக்கம் ஒவ்வொருவரிடத்திலும் இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் நான் ஈமானை மேற்கொண்டிருக்கிறேன் என்று வாதம் செய்யும் ஒவ்வொரு முஃமின்களிடமும் இருக்க வேண்டும். மேலும் தக்வாவுடன் இரண்டாவதாக தவக்குல் – நம்பிக்கை இருக்க வேண்டும். ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று **முத்தகீ** – இறையச்சம் உடையவர் மற்றும் **முதவக்கல்** – இறைவனை மட்டுமே சார்ந்திருப்பவர். ஒரு மனிதர் தன் நிலையை மாற்றி அவர் தனக்காக ரிஸ்கினை அமைத்துக் கொள்வது மட்டுமல்லாமல் தனது சந்ததிகளுக்காகவும் ரிஸ்கினை அமைக்கின்றார்கள். இங்கு இன்னொரு விஷயமும் தெளிவாக வேண்டும். அதாவது முத்தகீன்களின் சந்ததிகள் வன்முறை மற்றும் குழப்பத்தில் நிலைத்திருந்தால் பிறகு இறைவனின் மற்றொரு சட்டம் செயல்படத் தொடங்கிவிடும். பிறகு பரக்கத் மற்றும் பாதுகாப்பினை அவர்களிடமிருந்து விலக்கிவிடுகின்றான். ஆக உண்மையான முத்தகீன்களின் சந்ததிகள் நல்ல தர்பிய்யத்தின் விளைவாக தானும் தக்வாவில் நிலைத்திருக்க முயற்சி செய்வார்கள். இவ்வாறான தர்பிய்யத்தின் மூலம் தனது சந்ததிகளுக்கு வழங்கிக் கொண்டே செல்வார்கள். ஆக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இவ்வார்த்தையானது எந்தவித இயற்கை சட்டத்திற்கு மாற்றமானதாக இல்லை; முரண்பட்டதாக இல்லை. பிறகு ஏன் ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களின் மகன் மூழ்கிவிட்டான்? ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களின் மகன் அந்த தக்வாவிலிருந்து பங்கு பெறவில்லை. மாறாக, வரம்பு மீறியதன் காரணமாக தீய முடிவு ஏற்பட்டது. ஆனால் ஒரு நல்லவர் மற்றும் தக்வா உள்ளவரின் மகன் ஷிர்க்கில் ஈடுபடாமல் மற்ற உலக விஷயங்களில் தனது பலவீனங்களை வெளிப்படுத்தினால் கூட இறைவன் அவர்களுக்கு கையேந்தும் சூழ்நிலையை ஏற்படுத்தமாட்டான். மாறாக, அவர்களுக்கு உதவி

செய்கிறான். அவர்கள் தக்வாவில் நிலைத்திருந்தால் அவர்கள் இறைவனின் தோற்றத்தை தானும் பார்த்துக் கொள்கிறார்கள்.

சில நேரம் சிலர் கூறுகின்றனர். அதாவது நாங்கள் தொழவும் செய்கின்றோம். மற்ற நற்செயல்களையும் செய்ய முயற்சி செய்கின்றோம். ஆனால் எங்களது நிலைமை மிக மோசமானதாக ஆகிக் கொண்டே செல்கின்றது. இங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய ஓர் விஷயத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது அல்லாஹ்வின் பார்வையில் முத்தகீயாக இருக்க வேண்டும். மேலும் அதற்காக பல துன்பங்களை சந்திக்க வேண்டும். இவ்வாறான மக்கள் அதிகமாக கவலைப்பட வேண்டும். மேலும் இஸ்திக்ஃபார் அதிகமாக செய்வதும் அவசியமாகும். அல்லாஹ்வின் வாக்குறுதி எப்பொழுதும் பொய் ஆகாது. ஏதாவதொரு இடத்தில் குறை காணப்படுகிறதென்றால் அது நம்மிடத்தில் தான் அந்த குறை இருக்கின்றது. நுணுக்கத்தில் நுணுக்கமான நற்செயலை செய்வது மற்றும் அதனை பாதுகாப்பது இவைதான் தக்வா ஆகும். ஆக எவ்விடத்தில் வெளிப்படையான நமது முயற்சி மற்றும் உழைப்பிற்குப் பிறகும் நிலைமைகள் மோசமாகின்றது என்றால் நாம் நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

உதாரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வியாபாரத்தைப் பற்றி கூறினார்கள். அதாவது இவ்விஷயத்தில் ஒரு சிறு பொய்யினைக் கூறினால் கூட அது அவனை தக்வாவிலிருந்து தூரம் கொண்டு சென்று விடுகின்றது. இது அல்லாஹ்வின் மீது வைக்கும் தவக்குலுக்கு மாறுபட்ட ஒன்றாகும். ஆகவே இறைவனின் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கு நாம் சின்னச்சின்ன விஷயங்களைக் கூட கண்காணித்து வர வேண்டும். அதாவது நமது பேச்சில் எவ்விடத்திலும் பொய் கலக்கவில்லையே, நமது எண்ணத்தில் எவ்வித கோணலும் இல்லையே, எந்த செயலைச் செய்தாலும் நேர்மையாக செய்கின்றோமா என்பதை கவனித்து வர வேண்டும். **கவ்லே ஸதீது** என்பதற்கு உண்மையைப் பேசுவது மட்டுமல்ல. மாறாக மற்றவருக்கு தெளிவாக விளங்கும் அளவிற்கு பேசுவதாகும். பிறகு இபாதத்திற்காக கொடுக்கும் உரிமை, அதாவது முத்தகீ ஆவதற்கு இபாதத்தை நிலைநாட்டுவது அவசியமாகும். ஆக ஹகூகுல்லாஹ் மற்றும் ஹகூகுல் இபாதை நிறைவேற்றுபவரே உண்மையாக இருப்பவராவார். நான் கூறியது போன்று இதற்காக நாம் நம்மை நாமே ஆழமாக சோதித்து வர வேண்டியது அவசியமாகும். சிலர் இக்காலத்தில் பெரிய பணக்காரர்களாக இருப்பர். வெளிப்படையாக செல்வம் கொண்டவர்களாக இருப்பர். ஆனால் இறைவன் பார்வையில் இந்த செல்வங்கள் அவர்களுக்கு நெருப்பாக இருக்கின்றது. ஒன்று, இவ்வுலகத்திலேயே இவர்கள் பலவகையான நெருப்பில் பொசுங்கிக் கொண்டிருப்பார்கள். அதாவது நோயின் காரணமாகவும், வழக்கு, துன்பம், இன்னல்களின் காரணமாக எரிந்து கொண்டிருப்பர். இவ்வாறு இவர்களின் செல்வங்கள் நெருப்பில் அவரை எரிக்கக் கூடியதாக இருக்கும். மற்றொன்று மறுமையின் நெருப்பாகும். இறைவன் இதைக்கூறி அச்சமூட்டுகின்றான். ஆக இவர்களின் இப்பொருளானது நமது பார்வை படுவதற்கும் முஃமினின் பார்வை படுவதற்கும் ஆன பொருளில்லை. மாறாக அச்சுறுத்தக்கூடிய விஷயமாகும். ஆனால் இறைவன் முஃமின்களுக்காக ரிஸ்கினைப் பற்றி பேசும் பொழுது அருளுக்குரிய ரிஸ்கைப் பற்றி பேசுகின்றனர். ஒரு முஃமினுக்கு ஆன்மீக ரிஸ்க் தான் அசல் குறிக்கோளாக இருக்கின்றது. இதுதான் அனைத்து பொருளை விடவும் முன்னிலையில் இருக்கின்றது. இதன் விளைவாக இவ்வுலகத்திலும் சாந்தம் கொண்ட உள்ளம் கிடைக்கிறது. மரணத்திற்குப் பிறகும் கூட அல்லாஹ் தனது திருப்தியினையும், சுவர்க்கத்தினையும் வழங்குகின்றான். ஆக ஓர் உலகவாதியின் தரம் மற்றும் ஆன்மீகவாதியின் தரத்திலிருந்து பல வேறுபாடுகள் இருக்கின்றன. இறை திருப்தியை அடைவதை மட்டும் நோக்கமாகக் கொண்ட ஒருவர் உலகத்தின் பின்னால் ஓடமாட்டார். மாறாக, பௌதீக செல்வங்களைக் கூட இறை திருப்தியைப் பெறுவதற்கு வழியாக ஆக்கிக் கொள்வார்.

திருக்குர்ஆனில் இறைவன் நம்பிக்கையாளருக்கு எவ்வித கணக்குமின்றி ரிஸ்க் வழங்குவது பற்றியும், காஃபிர் மற்றும் உலகவாதிகளுக்கு இவ்வுலகத்தின் சுகபோகங்களில் மூழ்குவது பற்றியும் இவ்வாறு கூறுகின்றான். **ஸுய்யின லில்லஸீன கஃபருல் ஹயா[த்]து(d)த்துன்யா வயஸ்ஹரூன மினல்லஸீன ஆமனூ வல்லஸீனத்த(q)கவ் ஃபவ்(q)கஹும் யவ்மல் (q)கியாமா. வல்லஸீன**

**யர்ஸு(q)கு மய்யஷாஉ பி(g)கய்ரி ஹிஸாப்** – நிராகரிப்பவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை அழகு வாய்ந்ததாகக் காட்டப்பட்டுள்ளது. அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களை எள்ளி நகையாடுகின்றனர். ஆனால் இறையச்சமுடையவர்கள், மறுமை நாளில் அவர்களை விட மேலானவர்களாக இருப்பர். அல்லாஹ், தான் விரும்புபவர்க்குக் கணக்கின்றி வழங்குகின்றான். (2:213)

ஆக இவ்வசனத்தில் எங்கு காஃபிர்களுக்கு உலகப் பொருளே போதுமானது என்று நினைப்பதைப் பற்றி குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளதோ அங்கு பொதுவான முறையில் அனைத்து உலகவாதிகளைப் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. உலகவாதி ஒரு முஃமினை தனது செல்வத்தின் அடிப்படையில் இழிவானவராகக் கருதுகின்றார். பலவீனமான முஃமின்களை உலகப் போதையில் மூழ்கியதன் காரணமாக ஏளனம் செய்கின்றார். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். கியாமத் நாள் நியமிக்கப்பட்டுள்ளது. அவ்வேளையில் கொடுமை, வரம்பு மீறுதல் மற்றும் தனது படையின் பலத்தை வெளிப்படுத்துபவர்கள் வெற்றி பெறுவார்களா அல்லது இறை திருப்தியைப் பெறுவதற்கு அனைத்து இன்னல்களையும் பொறுத்துக் கொள்பவர் வெற்றி பெறுவாரா என்பது முழுமையாக வெளிப்பட்டு விடும். ஆக இவ்வசனத்தில் இறைவன் இதன் பக்கம் கவனமூட்டியிருக்கின்றான். **வல்லஸீனத்த(q)கவ்** – எவர் இறையச்சத்தை மேற்கொள்பவர்கள் என்ற சொற்றொடர் குறிப்பது, ஈமான் கொள்வது மட்டும் போதுமானதல்ல; தக்வாவை அடைவதே அசல் ஆணிவேராக இருக்கிறது. இதனை அடைவது அவசியமாகும். முஃமின்களுக்கு இதன் பக்கம் கவனமூட்ட வேண்டும். தக்வா இல்லையென்றால் ஈமான் மட்டும் இறை நெருக்கத்தினை பெற்றுத் தராது. இன்று நாம் பொதுவாக இஸ்லாமிய உலகினை பார்த்தால், இறைவன் முஃமின்களுக்கு, காஃபிர்களுக்கு எதிராக போரில் வெற்றி வழங்குவான் என்ற வாக்குறுதி இருந்தும்கூட இன்று முஸ்லிம்களின் நிலை கிழ் நோக்கிச் செல்வது வெளிப்படையாகத் தெரிகின்றது. இது தக்வா குறைவாக உள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது. இறைவனோ முஃமின்களுக்கு, எதிர்பாராத வகையில் பலவகையான வழிகளைத் திறந்து தருவேன் என்று வாக்குறுதி அளித்துள்ளான். பிறகு இவ்வசனத்தில் நான் முஃமின்களுக்கும் கணக்கில்லாமல் வழங்குவேன் என்று கூறுகிறான். இறைவன் இவ்வாறு கணக்கில்லாமல் கொடுப்பதன் காட்சி நமக்கு முந்தைய காலத்தில் தெரிகின்றது. இறைவன் முஸ்லிம்களுக்கு அவர்களின் தியாகங்களின் காரணமாக அதிகப்படுத்தி தனது ரிஸ்கினை வழங்கினான். பிறகு எதுவரை அவர்கள் தக்வாவின் ஒரு சில பகுதி இருந்ததோ அதுவரை இஸ்லாமிய ஆட்சியின் கம்பீரம் மற்றும் வல்லமை நிலைத்திருந்தது. ஆனால் இன்று நிச்சயமாக இஸ்லாமிய நாட்டை எண்ணெய் வளம் மூலம் செழிப்படையச் செய்திருக்கின்றான். ஆனால் இவ்வாறு இருந்தும்கூட மேற்கத்திய நாடுகளின் வலிமைகள் பொருளாதாரத்தின் அடிமைத்தன சங்கிலியினை அவர்களது கழுத்தில் மாட்டியுள்ளனர். அதன் காரணமாக ஏழை இஸ்லாமிய நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்த செல்வங்கள் போதுமானதாக இல்லை. அல்லது பாதுகாப்பிற்கான கவனம் இல்லை. அல்லது மேற்கத்திய நாடுகளுக்கு அஞ்சுகின்றார்கள்.

எவ்வாறு இருந்தபோதிலும் முஸ்லிம்களுக்கு, முஸ்லிம்களின் உதவி எவ்வாறு இருக்க வேண்டுமோ அவ்வாறு இல்லை. எவ்விடத்திலாவது ஏழை சமுதாயத்திற்கு உதவி செய்ய வேண்டுமென்றால் முதலில் இவ்வாட்சியானது மேற்கத்திய ஆட்சியின் பக்கம் முகம் திருப்புகின்றது. ஒரு காலம் இருந்தது. அப்போது பலவீனமாக இருந்த போதிலும் முஸ்லிம்களின் அடிப்படையிலும் எண்ணிக்கையின் அடிப்படையிலும், பொருளாதாரத்தின் அடிப்படையிலும் அனைத்து வகையிலும் பலவீனமாக இருந்த போதிலும் ஈரானின் ஏற்க முடியாத தோல்வி, மற்றும் பலம்பொருந்திய ஆட்சிகளையும் முஸ்லிம்கள் எதிர்கொண்டார்கள். அவர்களை தனக்குக் கீழ் கொண்டு வந்தார்கள் என்றால் அது ஆட்சியை வெற்றி கொள்வதற்காக அல்ல. மாறாக, கொடுமையினை நிறுத்துவதற்காகவே அவ்வாறு செய்தார்கள். இதனால் கொடுமைகளை நிறுத்துவதற்கு தக்வாவில் முழுமை அடைந்த அந்த ஈமானே உதவி புரிந்தது. ஆக, இறைவன் அவர்களுக்கு எண்ணற்றதை வழங்கினான். ஆனால் இன்று ஏழை இஸ்லாமிய நாடுகள் மேற்கத்திய நாடுகளை நோக்கி முகம் திருப்புகின்றது. வெளிப்படையாக ஒரு சில இஸ்லாமிய ஆட்சிகள் பொருளாதாரத்தைக் கொண்டதாக இருக்கிறது. இவர்கள் தனது உண்மையான மாலிக், ரப், வணக்கத்திற்குரியவனை விட்டு விட்டு உலகத்தின் மாலிக், ரப், வணக்கத்திற்குரியவனின் பக்கம் முகம் திருப்புகின்றது. இது தக்வாவில் குறைபாடு உள்ளது

என்பதனை வெளிப்படுத்துகின்றது. இவர்கள் உலகத்திற்கு முன்மாதிரியாக படைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் இவர்களது கழுத்தில் அடிமையின் சங்கிலி போடப்பட்டிருக்கின்றது. மேலும் இது இறைவனின் இறுதி விதியாகவும் இருக்கின்றது.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: நிச்சயமாக இறைவன் தனது தக்தீரை முழுமைபடுத்தியே தீருவான்.(65:4) ஆக இது இறைவனின் விதியாகும். இது திருக்குர்ஆனில் பதிவாகியுள்ளது. அல்லாஹ், அவனது ரஸுல் (ஸல்) அவர்கள் வெற்றி பெறுவார்கள்.(58:22) உலகத்தின் விதியோ இப்பொழுது இஸ்லாத்தினை சார்ந்தவையாக உள்ளது. ஆனால் இது எவ்வாறு? இதற்கான பதில் எவ்வாறு சஹாபாக்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து பலன் பெற்று மார்க்கத்தினை முன்னிலைப்படுத்தினார்களோ, மேலும் தக்வாவின் நுணுக்கத்தை கண்டறிந்து அதன்படி செயல்பட்டார்களோ, இஸ்லாத்திற்காக எந்நேரமும் தமது பொருள், உயிர், நேரத்தினை தியாகம் செய்யத் தயாராக இருந்தார்களோ எதிரிகளின் எதிர்ப்பு மற்றும் இன்னல்களால் பாதிக்கப்பட்டு, இறைவனின் கட்டளைக்கிணங்க ஹிஜ்ரத்தினை மேற்கொண்டார்கள். பின்பு இறைவன் இஸ்லாத்தின் வெற்றிக்காக எந்த அளவுக்கு கதவினை திறந்தானோ அதனை கணிப்பது கஷ்டமானது. முஸ்லிம்களின் இந்நிலையானது துவக்க காலமாகும்.

பிறகு அல்லாஹ் கணக்கில்லாமல் கொடுப்பதைப் பற்றி திருக்குர்ஆனில் மற்றோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்: **குல் யாஇபா(d)தில்லஸீன ஆமனுத்தகூ ரப்ப(k)கும் லில்லஸீன அஹ்ஸனூ ஃபீ ஹயா[த்]தி(d)த்துன்யா ஹஸனா. வஅர்ழுல்லாஹி வாஸிஅத். இன்னமா யுவஃப்பஸ் ஸாபிரூன அஜ்ரஹும் பி(g)கய்ரி ஹிஸாப் – நீர் கூறுவீராக. நம்பிக்கை கொண்ட என் அடியார்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்கு அஞ்சுங்கள். இவ்வுலகில் நற்செயல்கள் செய்பவர்களுக்கு மிகச் சிறந்த வெகுமதி உண்டு. அல்லாஹ்வின் பூமி மிக விரிவானதாகும். பொறுமையாளர்கள் தங்கள் நற்பலனைக் கணக்கின்றிப் பெறுவர். (39:11)**

இஸ்லாத்தின் ஆரம்ப காலக்கட்டத்தில் மக்காவில் முஸ்லிம்கள் மிகவும் ஆதரவற்றவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கே காஃபிர்கள் கொடுமையிழைப்பதிலிருந்து விலகியிருக்கவில்லை. பொது மக்களுக்கோ கொடுமையிழைத்து ஆண், பெண் இருவரையும் அடித்து, உதைத்து வந்தார்கள். அல்லாஹ் கூறுகின்றான்: முதல் விஷயம், ஈமானுடன் தக்வா மிக அவசியமாக இருக்கின்றது. மேலும் கூறுகின்றான்: அதாவது தக்வாவில் செயல்பட்டவாறு அனைத்து நற்செயலைச் செய்வதற்கு முயற்சி செய்வார்கள். அவர்களுக்கு மறுமை மட்டுமல்லாமல் இவ்வுலகிலும் பலன் கிடைக்கும். மேலும் கூறுகின்றான். மக்காவில் கொடுமையின் உச்சகட்டம் வந்தபொழுது இக்கொடுமையிலிருந்து பிழைப்பதற்கு ஹிஜ்ரத் செய்வதுதான் நல்லது. மேலும் இந்த ஹிஜ்ரத்தானது உங்களுக்காக நற்பலனை மேலும் தரக்கூடியதாக அமையும். மேலும் உங்கள் மீது இழைக்கப்பட்ட இக்கொடுமையினை இவ்வாறு விட்டு விடுவான் என்று கருத வேண்டாம். ஒவ்வொரு கொடுமைக்கும் அவன் கொடுக்கும் தண்டனையை உங்களால் யூகிக்கவே முடியாது. இதுதான் பொறுமையாளர்களுக்கு கிடைக்கும் பலனாகும். பிறகு நான் முன்பு கூறியதைப் போன்று இவ்வாறான பொறுமையாளர்களுக்கு இறைவன் உலகத்தின் ஓர் பெரும் பகுதியான ஆட்சி செய்பவர்களாக ஆக்கினான். ஆக, அந்த தக்வா மற்றும் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடந்ததுதான் அடிமட்டத்திலுள்ள பலவீனமான அம்மக்களுக்கு ஆட்சியினை வழங்கியது. இன்று முஸ்லிம்களுக்கு ஆட்சிகள் இருந்தும் கூட அவர்கள் ஒரு வகையில் அடிமைகளாக இருக்கின்றார்கள். ஆனால் அல்லாஹ் வாக்குறுதியை நிறைவேற்றுவதில் உண்மையாளனாக இருக்கின்றான். அவன் தனது அனைத்து காட்சியினையும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு காட்டி இவ்வாறு கூறினான். தக்வா மற்றும் பொறுமையின் பலன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் அல்ல. மாறாக, எவ்வாறு முன் காலத்திலும் முஃமின்கள் பொறுமையின் விளைவாக பலன்களை பெற்றார்களோ, அவ்வாறு இருளின் காலகட்டத்திற்குப் பிறகு மீண்டும் முஃமின்கள் பலனைப் பெறுவார்கள். மேலும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் வெற்றி அன்னாரின் அடியான் மற்றும் உண்மையான நேசரின் மூலம் நிலைபெறும் என்ற நற்செய்தியினையும் வழங்கியிருக்கின்றார்கள். மேற்கூறப்பட்ட முன்சென்ற முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட நிலையினைப் போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்திலும் தோன்றும். மேலும்

எவ்வாறு முதலில் முஸ்லிம்களுக்காக பூமி சுருக்கப்பட்டதோ அதன் பிறகு எவ்வாறு இஸ்லாத்தின் வெற்றி பரவிக் கொண்டே சென்றதோ அவ்வாறே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கும் பூமி சுருக்கப்படும். அதாவது நீங்கள் அக்காலத்தில் முஹம்மதிய மஸீஹிற்கு இன்னல்கள் கொடுக்காதீர்கள். மாறாக அவர்களிடம் சென்று எனது ஸலாத்தினை எட்ட வையுங்கள் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பாகிஸ்தானில் ஜமாஅத் ரீதியாக பூமி சுருக்கப்பட்டது என்பதற்கு இன்று ஒவ்வொரு அஹ்மதியும் சாட்சியாவார். பலதரப்பட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அல்லாஹ் இன்று 195 நாடுகளில் அஹ்மதிய்யத்தை நிலைநாட்டி விட்டான் என்பதனை ஒவ்வொரு அஹ்மதியும் அறிவார்கள். உறுப்பினர்களின் முன்னேற்றம் ஜமாஅத்தின் முன்னேற்றத்தை சார்ந்தவையாக இருக்கின்றது என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட இன்னல்களினால் ஜமாஅத்தின் முன்னேற்றம் நின்று விடாது. முந்தைய காலகட்டத்திலும் கூட முஸ்லிம்களின் சாட்சிகள் புதிய ஆட்சியின் கதவுகளைத் திறந்தது.

இன்றும் அஹ்மதிகளின் தியாகங்கள் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்திற்கு கரணமாக அமைந்து கொண்டே செல்கின்றது. இன்று முஹ்மதிய மஸீஹின் தூதுச் செய்தி சென்றடையாத அல்லது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதாத உலகத்தில் எந்தவொரு நாடும் இல்லை. உலகத்தில் M.T.A மூலமாக அனைத்து இடங்களிலும் தூதுச் செய்தி சென்றடைகிறது. ஸலவாத் M.T.A –ன் மூலம் ஓதப்படுகிறது என்றால் இதனால் படிப்பறிவில்லாத நாடுகளிலும் இதனை கேட்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. எவ்வாறு இருந்தபோதிலும் இது பரவுகின்றது. இன்று நான் கூறியது போன்று 195 நாடுகளில் M.T.A. சேனல் பார்க்கவும் கேட்கவும் செய்யப்படுகின்றது. ஆனால் M.T.A மூலமாக உலகத்தில் 195 நாடுகளில் ஒரே நேரத்தில் கேட்கவும் பார்க்கவும் செய்யப்படுகின்ற வேறு எந்த சேனலும் இல்லை. இதனை அஹ்மதி அல்லாதவர்களும் பார்க்கின்றனர். இதில் சிலர் ஆட்சேபனை செய்வதற்காகவும் சிலர் அறிய வேண்டும் என்பதற்காகவும் பார்க்கின்றனர். எவ்வாறிருந்தபோதிலும் இதனை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நான் கூறுவதன் நோக்கம் என்னவென்றால் இறை ஜமாஅத்திற்கு இதுதான் அடையாளமாக இருக்கின்றது. இதனை இறைவன் கூறியும் இருக்கின்றான். அதாவது அவர்களுக்கு பூமி சுருக்கப்படும் நேரத்தில் அல்லாஹ் அவர்களுக்காக மற்றொரு இடத்தில் பலதரப்பட்ட வகையில் பலதரப்பட்ட முறையில் விரிவாக்கத்திற்கான வளர்ச்சிக்கான ஏற்பாட்டை செய்து விடுகின்றான். மேலும் முஹம்மதிய மஸீஹின் ஜமாஅத்துடன் அல்லாஹ் இவ்வாறான நடைமுறையை மேற்கொண்டதன் காரணம் இஸ்லாத்தின் வெற்றி அல்லாஹ்வின் வாக்குகள் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகத்தான் நிறைவேறும் என்பதே.

இறைவன் நம் அனைவருக்கும், தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் இந்தப் பொறுப்பினை புரிந்தவாறு தக்வாவில் செயல்பட்டவாறு, எக்குறிக்கோளைக் கொண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்களோ அதனை நிறைவேற்ற முயற்சி செய்யக்கூடியவராகவும், மேலும் அல்லாஹ்வின் எண்ணற்ற பலன்களின் காட்சியினைப் பார்க்கக் கூடியவர்களாகவும் ஆவதற்கான தவ்ஃபீகை வழங்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON,**

**ON 12.03.2010**

Translated by : **Moulvi R. ABDULLAH**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**